செய்தி வெளியீடு எண் : 28 நாள் :14.02.2020

## தமிழ்நாடு வனத்துறை

தேனி வனக்கோட்டம், தேனி

மற்றும் தேனி மாவட்ட நிர்வாகம்.

அறிவிப்பு

தேனி மாவட்டம், தேனி வனக்கோட்டம், போடி வனச்சரகத்திற்குட்பட்ட குரங்கணி வனப்பகுதியில் அனுமதிக்கப்பட்டு வந்த மலையேற்றத்திற்கு (Trekking) தற்போது கோடை காலம் என்பதால் வனப்பகுதியில் தீ பற்ற வாய்ப்பு உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக **15.02.2020 ம் தேதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை தடை விதிக்கப்படுகிறது.**

**வனப்பகுதிக்குள் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் யாரும் வனத்துறையின் அனுமதியின்றி செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி வனத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வனப்பகுதிக்குள் யாரேனும் தீ பற்ற வைக்க முற்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வனப்பகுதிக்குள் தீ நிகழ்வுகள் ஏதும் ஏற்படின், உடனடியாக அருகிலுள்ள வனத்துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்குமாறும், தீ அணைக்கும் பணிகளில் அருகாமையிலுள்ள பொதுமக்கள் வனத்துறையினர் மற்றும் அரசு அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தீ நிகழ்வு குறித்து தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்.

**மாவட்ட வன அலுவலகம், தேனி : 04546 252552**

**மாவட்ட பேரிடர் மேலாண்மை அலகு : 1077**

மாவட்ட வன அலுவலர்,
தேனி வனக்கோட்டம், தேனி

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**